# வானவில்

VAANAVIL
ISSUE – 29 MAY 2013

இதழ் - 29 வைகாசி 2013


# தமிழ் பேசும் மக்களின் உரிமை மறுப்பில் போட்டியில் இறங்கியுள்ள தென்னிலங்கை பிரதான கட்சிகள்!

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் மிகச் சிக்கலான ஒரு நிலையை எட்டியுள்ளது. இலங்கையின் அரசாங்கம் மட்டுமின்றி, எதிர்க்கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இதுவரை காலமும் இழுத்தடிப்புகளைச் செய்து வந்தது போய், இப்பொழுது தீர்வு காண்பதை வெளிப்படையாக எதிர்க்கும் அளவுக்கு நிலைமைகள் எதிர்த் திசையில் பயணிக்க ஆரம்பித்துள்ளன.

எந்த இனப்பிரச்சினைக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்களோ, அந்த ஆயுத எதிர்ப்பு 2009 மே மாதத்துடன் முள்ளி வாய்க்காலில் வைத்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. நியாயமான கோரிக்கைகளுக்காக எழுந்த அந்தப் போராட்டம் புலிகளின் அதிகார வெறிக்கு இரையாக்கப்பட்ட போது, தமிழ் மக்கள் சந்தித்த வரலாறு காணாத அழிவு காரணமாக, 'பிச்சை வேண்டாம், நாயைப் பிடி' என்ற நிலையில் அந்த கோர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை தமிழ் மக்கள் மனப்பூர்வமாக ஆதரித்தனர்.




யுத்தம் முடிந்த கையோடு நாட்டின் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அறிவித்தார். அவரது அறிவிப்பைக் கேட்டு தமிழ் பேசும் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர்.

ஆனால் இப்பொழுதோ ஜனாதிபதி தனது வாக்குறுதிகள், அறிவிப்புகளில் இருந்து பின்வாங்க ஆரம்பித்துள்ளார். தனது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிங்கள மக்களில் 5 வீதத்தைத் தன்னும் பிரதிநிதித்துவம் செய்யாத, மிகச்சிறிய சிங்களப் பேரினவாதக் கட்சிகள் சிலவற்றின் வேண்டுகோளை ஏற்று, 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து, அதை உயிரும் சதையும் இரத்தமும் அற்ற ஒரு வெறும் எலும்புக்கூடாக மாற்றுவதற்கு முயல்கிறார்.

சிங்கள இனவாதக் கட்சியான ஹெல உருமய 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ள சட்ட மூல வாக்கெடுப்பில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் போல் வாக்களிக்கலாம் என்று கூறியதின் மூலம், ஜனாதிபதி தனது அரசாங்கத்துக்கு உள்ள பாரிய கடப்பாடொன்றை மிக இலகுவாகத் தட்டிக் கழித்துள்ளார். இனவாத சக்திகளின் இந்த எதிர்ப்புரட்சிகரத் திட்டத்தை துணிந்து நின்று முறியடித்து, நாட்டின் ஜனநாயக விழுமியங்களையும், பன்முகத் தன்மையையும், இனங்களின் சமத்துவம் மற்றும் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டிய ஜனாதிபதி, குறுகிய இன வெறியர்களுக்குத் துணை போயிருப்பது, எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

அதே வேளையில் தென்னிலங்கையில் உள்ள ஏனைய பிரதான கட்சிகளை எடுத்துக் கொண்டால், அவை அரசாங்கத்தை விட மிக மோசமான இனவாத நிலைப்பாட்டில் இருப்பதைக் காண முடிகிறது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிலாவது,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க....

# இலங்கையில் தணியாத தீவிரவாதம்

**வே**தாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக சில தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை பங்கிட்டு அளிப்பதற்கு எதிராக கூக்குரலிட தொடங்கியுள்ளனர். முன்னர், தமிழரசுக்கட்சி தலைவர் மறைந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் முன்னாள் இலங்கை பிரதமர்களான பண்டாரநாயக்காவும் (1957 ஆண்டில்) டட்லியும் (1965 ஆண்டில்) செய்துகொண்ட ஒப்பந்தங்களும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்காவால் முன்னெடுக்கபட்ட தீர்வும் (1995 – 2000 ஆண்டில்) சில தென்னிலங்கை அரசியல்வாதிகளின் எதிர்ப்புகளால் ஆரம்பகட்டத்திலேயே கைவிடப்பட்டன.

ஆனால் இம்முறை, 26 வருடங்களுக்கு முன்னர் (1987 இல்), இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டு, இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 8 மாகாணசபைகளுக்கு (வடக்கு – கிழக்கு மாகாணம் அப்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டு ஒரு சபையாக இருந்தது) அதிகாரத்தை பங்கிட்டு அளித்த 13வது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை இரத்து செய்யக்கோரி தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் இரு அரசியல் கட்சிகளும் பௌத்த அமைப்பொன்றும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

முதன்முறையாக 1988 ஆண்டில், மூன்று கட்டங்களாக 8 மாகாணசபைகளுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. 1990 ஆண்டிற்கு பின்னர் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணசபை செயலிழந்தது. எனினும் ஏனைய 7 மகாணசபைகளும் தொடர்ந்து இயங்கியது. அதாவது 25 வருடங்களுக்காக 13வது திருத்தச்சட்டம் 7 மகாணசபைகளில் எதுவித எதிர்ப்புமின்றி அமுலில் இருந்து வருகின்றது. 1988 ஆண்டிற்கு பின்னர் 2008 ஆண்டில் கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடாத்தப்பட்டு, 13வது திருத்தச்சட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணசபையும் தற்போது செயற்பட தொடங்கியுள்ளது.

25 வருடங்களின் பின்னர் இவ்வருடம் வடக்கு மாகாணத்திற்கான தேர்தல் நடாத்தப்படுமென அறிவிப்புகள் வெளியான நிலையில், தென்னிலங்கையில் 13வது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்கக்கோரிய தீவிர பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. வடக்கு மாகாணசபை தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி தவிர்க்கமுடியாதது என்ற பின்னணியே, இப்பிரச்சாரத்திற்கான அடிப்படை காரணமாகும். பிரிவினைவாத எண்ணக்கருவினை கொண்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு, 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை தமது பிரிவினைவாத நோக்கங்களுக்கு ஏதுவாக பயன்படுத்துவார்கள் என சில தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறிவருகிறார்கள்.

13வது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்கக்கோரும் பிரச்சாரத்தின் தீவிரத்தன்மையினை அவதானிக்கும்போது, 1983 ஆண்டுகாலத்திற்கு முற்பட்ட காலப்பகுதிக்கு தென்னிலங்கையின் அரசியல்களம் நகர்த்தப்படுகின்றதா என்ற அச்சம் தோன்றியுள்ளது. 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தின் அறுவடை, 13வது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்குவதிலிருந்தா ஆரம்பிக்கவுள்ளது? மாகாணசபை முறையை தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வாக ஏற்றுக்கொள்ளாதவர்கள், வேறு எந்த வகையில் இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த போகிறார்கள்?

தமிழ் தேசியக்கூட்டமைப்பு உட்பட புலிகள் சார்பு உள்நாட்டு, வெளிநாட்டு தமிழ் அரசியல்வாதிகள், 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தமிழ் மக்களுக்கான குறைந்தபட்ச தீர்வாக ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் 13வது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்கக்கோரிய பிரச்சாரங்கள் தென்னிலங்கையில் வலுவாகியுள்ள நிலையில், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இச்சட்டத்தினை காப்பாற்ற, இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியாவை தலையிடுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். மாகாணசபை முறை ஒற்றை ஆட்சிக்கு உட்பட்டதென அதனை நிராகரிப்பவர்கள், மாகாணசபை முறையை காப்பாற்ற இந்தியாவை வருந்தி அழைப்பதை 'இதெல்லாம் அரசியலில் சர்வ சாதாரணமப்பா' என்ற வார்த்தைகளால்தான் உள்ளடக்கலாம்.

2009 ஆண்டில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட புலிகளுடனான யுத்தத்தில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டுமென்ற பலமுனைகளிலான அழுத்தம், தமிழ் நாட்டில் இலங்கை அரசுக்கும் சிங்கள இனத்தவருக்கும் எதிராக அதிகரித்துவரும் தீவிரவாதம் போன்றவற்றில் சிக்கி மீளமுடியாமல் தவிக்கும் இலங்கை, உள்நாட்டில் மேலும் புதிய சிக்கல்களை தோற்றுவிக்காமல் இருப்பது நல்லது. *

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# பூமி வெப்பமடைவதால் ஏற்பட்டு வரும் பாதிப்புகளுக்கு ஆபிரிக்காவில் ஓர் உதாரணம்!



**நா**ம் வாழுகின்ற இந்த பூமியில் கடந்த பல ஆண்டுகளாக ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்களால் இப்புவி மிக வேகமாக வெப்பமடைந்து வருகின்றது. இதனால் எதிர்காலத்தில் மனிதர்கள் தமது வாழ்வு சம்பந்தமாக மிகவும் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய அபாயகரமான நிலை எழுந்துள்ளது. இந்த மாற்றங்கள் இயற்கையால் ஏற்பட்டவையல்ல.

இயற்கை இந்த பூமியைப் படைத்தபோது, சகலவிதமான வளங்களுடனுமே படைத்து அருளியது. ஆனால் மனிதன் எப்பொழுது இங்கு தோன்றினானோ, அதன் பின்னரே இந்தப் பூமித்தாய்க்கு தீங்கு ஏற்படத் தொடங்கியது. எம்முடன் உடன் வாழ்வதற்காக. இந்தப் பூமியில் தோன்றிய தாவரங்களாலோ அல்லது மிருக சாதிகளாலோ இந்தப் பூமிக்கு ஆபத்து ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. இந்த ஆறறிவு படைத்த மனிதனாலேயே அத்தனை தீங்குகளும் ஏற்பட்டு வருகின்றன

மனிதன் முதலில் தனது தேவைக்காக முன்யோசனையோ முன்னேற்பாடுகளோ இன்றி இயற்கை வளங்களை அழிக்கத் தொடங்கினான். பின்னர் முதலாளித்துவம் தனது பேராசை பிடித்த லாப நோக்கத்துக்காக கைத்தொழில் புரட்சி என்ற பெயரில் இயந்திரமயமாக்கலைத் தீவிரப்படுத்தி சுற்றுச் சூழலை மாசுபடுத்தியது. இதன் விளைவாக வளிமண்டலம் மாசுபட்டதுடன், பூமியும் வெப்பமடைந்து, தொழிற்சாலைகள் வெளித்தள்ளிய நச்சுப் பொருட்களால் கடலும், ஆறுகளும், ஏரிகளும் பாதிப்புக்குள்ளாயின. அத்துடன் கைத்தொழில் புரட்சியால் வேகமாக வளர்ந்த முதலாளித்துவம் நாடு பிடிக்கும் பேராசை நடவடிக்கைகளில் இறங்கி யுத்தங்களில் ஈடுபட்டதால் மேலும் பல பாதிப்புகள் ஏற்பட்டன.

இவற்றின் ஒட்டுமொத்த விளைவுகளால், பல விபரீதமான விளைவுகள் இந்தப் பூமியில் வேகமாக ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பூமியை சூரியனின் நேரடிக் கதிர் வெப்பத்திலிருந்து பாதுகாத்து வந்த ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்தது. பின்னர் பூமி வெப்பமடைந்ததால், தற்பொழுது துருவப் பிரதேசத்தில் உள்ள, இந்தப் பூமியின் தட்ப வெப்ப நிலையை சம நிலையில் பேணி வந்த பனிப்பாறைகள் உருக ஆரம்பித்துள்ளன. அதனால் கடல்மட்டம் உயர்ந்து வருகிறது. அதன் விளைவாக எதிர்காலத்தில் பல கரையோர நாடுகள் பாதிப்படையவுள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் எமது தென்னாசிய நாடுகளில் ஒன்றான மாலைதீவுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். தற்பொழுது வந்துள்ள ஒரு புதிய தகவலின்படி, இலங்கையின் வட பகுதியும் கடலில் அமிழ்ந்து போகக்கூடிய அபாயம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

பூமி வெப்பமடைவதால் இந்தியாவிலுள்ள புனித நதி என வர்ணிக்கப்படும் கங்கை மற்றும் யமுனை, பிரமபுத்திரா நதிகள் உட்பட, உலகிலுள்ள பல நதிகள் வற்றிப் போகக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. இதன் மூலம் விவசாயத்துக்கு பாதிப்பு ஏற்படுவது மட்டுமின்றி, மனிதர்கள் மற்றும் மிருகங்களின் குடி தண்ணீருக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்படும். அது பெரும் உலக நெருக்கடியை உருவாக்கும். அதனால்தானோ என்னவோ, மூன்றாவது உலக யுத்தம் 'தண்ணீருக்கான யுத்தமாக' இருக்கும் என சில ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர்.

பூமி வெப்பமடைவதால் ஏற்பட்டு வரும் பாதிப்புகளுக்கு உதாரணமாக, ஆபிரிக்காவிலுள்ள சாட் என்ற ஏரி பற்றிய திடுக்கிடும் தகவல்கள்களைச் சுட்டிக் காட்டலாம்.

இந்த சாட் ஏரி நீலமும் பச்சையும் கலந்த பார்ப்பவரை வசீகரிக்கும் நீரையுடைய ஒரு ஏரி. இது ஆபிரிக்காவிலுள்ள சாட், கமரூன், நைகர், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு இடையில் உள்ளது. இதன் ஒரு விளிம்பில் உலகிலேயே மிக வெப்பமான சகாரா பாலைவனம் உள்ளது. இந்தப் பாலைவனம் பூமிப்பந்தின் மேலும் கீழும் உள்ள ஆக்டிக் மற்றும் அன்ராறிக்கா பனிப் பிரதேசங்களுக்கு அடுத்ததாகப் பரப்பளவில் பெரிய பிரதேசமாகும்.

இந்த சாட் ஏரி இதைச் சூழவுள்ள நாடுகளின் மக்களினது குடிநீர், விவசாயம், கால்நடைகளின் தண்ணீர்த்தாகம் என்பனவற்றை நீண்டகாலமாகத் தீர்த்து வந்தது. அந்த அளவுக்கு அது மிகப் பிரமாண்டமான ஏரி. 1960களில்

அதன் பரப்பளவு சுமார் 38,000 சதுர கிலோமீட்டர்களாக இருந்தது. ஆனால் 50 வருடங்களின் பின்னர், பூமி வெப்பமடைந்ததின் காரணமாக அதன் பரப்பளவு சுருங்கி தற்பொழுது அதன் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? வெறுமனே 1300 சதுர கிலோமீட்டர்கள். நம்ப முடிகிறதா? ஆனால் அதுதான் உண்மையென்றபடியால் நம்பித்தான் ஆக வேண்டும்.

பூமி வெப்பமடைந்ததின் காரணமாக இந்த மாபெரும் ஏரியின் பெரும்பகுதியை சகாரா பாலைவனம் படிப்படியாக விழுங்கி விட்டது. தற்பொழுது ஒவ்வொரு வருடமும் சாராசரியாக இந்த ஏரியின் 48 சதுர கிலோமீட்டர் பிரதேசத்தை சகாரா பாலைவனம் விழுங்கி வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால், மிக விரைவில் இந்த ஏரி இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

ஆபிரிக்காவில் கடந்த காலங்களில் மேற்கத்தைய காலனி ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரித்தாளும் அடக்குமுறை ஆட்சிகளின் (இலங்கையில் எழுந்துள்ள இனப் பிரச்சினைக்கும் அதுவே அடிப்படைக் காரணம்) நீட்சியாக, பல நாடுகளில் உள்நாட்டு மோதல்களும், நாடுகளுக்கிடையில் யுத்தங்களும் நடைபெற்று வருகின்றன. அதன் காரணமாக பல இலட்சம் மக்கள் செய்து மடிந்துள்ளதுடன், மேலும் பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதுதவிர யுத்தம் ஏற்படுத்திய வறுமையினாலும், வளமிக்க பூமி பாலைவனமாகிப் போனதாலும், கொடிய நோய்களினாலும் வருடாவருடம் பல இலட்சம் மக்கள் அங்கு மரணித்து வருகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க, வளமிக்க பகுதிகள் பாலைவனமாக மாறுவதால் ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் மக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களைவிட்டு தண்ணீர் கிடைக்கும் பகுதிகளுக்கும், நகரப்புறங்களுக்கும் இடம்பெயர்ந்து வருகின்றனர். இதுபற்றி நைஜீரியாவில் சக்தி வளங்களைப் புதுப்பிக்கும் அபிவிருத்தி அமைப்பைச் சேர்ந் யகாயா அஃமெட் (Yahaya Ahmed) கருத்துத் தெரிவிக்கையில், வட நைஜீரியாவில் சில வருடங்களுக்கு முன்னர் இருந்த 200 கிராமங்கள் இப்பொழுது இல்லாமல் போயுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்! இந்த மாதிரியான நிலைமைகள் அந்தக் கண்டத்திலுள்ள மாலி, சாட், நைகர், சூடான், மொரித்தானியா, எத்தியோப்பியா மற்றும் கென்யா ஆகிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ளன.

ஆனால் மனிதனால் இந்தப் பூமியில் ஏற்பட்டுள்ள இந்தப் பேரழிவுகள் தடுக்கப்பட முடியாதவை அல்ல. மனிதன் நினைத்தால் அவற்றைச் சீர்செய்ய முடியும். அதற்கும் ஆபிரிக்காவிலேயே ஒரு உதாரணம் உள்ளது.

நைகர் நாட்டில் 1984இல் கெய்ற்றா திட்டம் (Keita Project) என்றொரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தலைநகர் நியாமியிலிருந்து (Niamey) 600 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சனத்தொகை மிகுந்த கெய்ற்றா சமூகத்தில் (Keita Community) இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. வரண்டு போய் பாலைவனமாக மாறியிருந்த அந்தப் பகுதியில் மீண்டும் காடுகளை வளர்த்து, நீர்த்தோக்கங்களைக் கட்டி, அணைகளை உருவாக்கி அப்பிரதேசத்தை மீண்டும் செழிப்பான பூமியாக மாற்றியுள்ளனர். அதன்மூலம் சுமார் 5,000 சதுர கிலோமீட்டர் பிரதேசம் வரட்சியினின்றும் மீட்கப்பட்டுள்ளது.

அதேபோல 1949இல் சீனாவில் சோஸலிசப் புரட்சி ஏற்பட்ட பின்னர் அங்கு பல பாலைவனங்கள் மீட்கப்பட்டதுடன், மண் அரிப்பு, புயல் தாக்கம், வெள்ள அழிவு, நதி பெருக்கெடுப்பு என்பனவும் தடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, லொயெஸ் பீடபூமி (Loess Plateau) வட சீனாவில் 620,000 சதுர கிலோமீட்டர்களைக் கொண்ட ஒரு பிரதேசம். புல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வளம் கொழிக்கும் பூமியாக இருந்த இந்தப் பகுதி, பின்னர் நடைபெற்ற காடுகள் அழிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பின்னர் சீனாவின் புதிய சோஸலிச அரசு 20 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் மர நடுகையை ஆரம்பித்தது. பல மில்லியன் மரங்கள் நடப்பட்டதுடன், பல நீர்த் தேக்கங்களும் அணைகளும் கட்டப்பட்டன. அதன் மூலம் அப்பகுதி இப்பொழுது வளமுள்ள பூமியாக மாற்றப்பட்டுள்ளது.

எனவே நாம் வாழும் இந்தப் பூமியை நாம் பாதுகாப்பதானால், முதலில் நாம் மேற்கொண்டுவரும் அழிவு வேலைகளை நிறுத்த வேண்டும். அதேநேரத்தில் ஏற்கெனவே செய்த அழிவு வேலைகளுக்கு தகுந்த பரிகாரங்களைச் செய்ய வேண்டும். இருக்கின்ற இந்த அருமை பெருமையான பூமியைப் பாதுகாப்பதற்கு வழிவகை செய்யாமல், செவ்வாயில், சந்திரனில், சூரியனில் மனிதனைக் குடியேற்றுவது பற்றி ஆராய்வதில் எந்தப் பயனும் இல்லை.


**- உதயணன்**

(இந்தக் கட்டுரைக்கான சில தகவல்கள் கனடாவிலிருந்து வெளிவரும் Toronto Star பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது. அப்பத்திரிகைக்கு எமது நன்றி) *

# மேதின வாழ்த்துக்கள்

தமது கோரிக்கைகளுக்காகப் போராடினாலும், அதன் மூலம் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்கும், விடுதலைக்கும் வித்திட்ட அமெரிக்காவின் சிக்காக்கோ நகர வீரம் செறிந்த தொழிலாளர்கள் நடாத்திய போராட்டத்துக்கு சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்துவதுடன், அவர்கள் செய்த மாபெரும் தியாகத்துக்காக தனது அஞ்சலியையும் 'வானவில்' செலுத்துகிறது. அதே நேரத்தில் தமது உரிமைகளுக்காக சளைக்காது வீரதீரத்துடன் தொடர்ந்தும் போராடி வரும் உலகெங்கும் உள்ள தொழிலாளி வர்க்கத்துக்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும் 'வானவில்' தனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

*ஏனைய மேற்கு நாடுகளைப் போலவே இத்தாலியிலும் (Italy) தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கையாட்கள் மூலம் பலமானதொரு வலைப்பின்னலை உருவாக்கி வைத்திருப்பதுடன், தவறான தகவல்களைப் பெரும் அளவில் பிரச்சாரம் செய்வதால், அது அவர்களுக்கு நிதி வசூல் செய்வதற்கு உதவி வருகிறது. இத்தாலியில் அவர்களது தலைமைக் காரியாலயம் அந்நாட்டின் தென் பகுதியிலுள்ள சிசிலி (Sicily) என்ற தீவு மாநிலத்தில் அமைந்துள்ளது. இதன் தலைநகரம் பலர்மோ (Palermo) ஆகும். சிசிலியில் தமிழர்களின் சனத்தொகை 15,000இற்கு மேற்பட்டது எனக் கணிக்கப்படுகிறது. புலிகள் சிசிலிய மாஃபியாக்களுடன் அந்தரங்க அந்நியோன்யத்துடன் கைகோர்த்துச் செயற்படுகின்றனர். அவர்கள்*



# சிசிலியிலுள்ள மாஃபியாக்களுடன் புலிகள் நெருக்கமாகக் கைகோர்த்துச் செயல்படுகின்றனர்!

*மாஃபியாக்களின் போதைப் பொருள் கடத்தல்களுக்குப் பொறுப்பாக இருப்பதுடன், கறுப்புப்பண நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சிசிலியிலுள்ள மிகப்பெரும் மாஃபியாக் குடும்பங்களில் ஒன்றான கிறிகோ குடும்பத்துடன் (Greco Family) புலிகள் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*


## ஹேமந்த வர்ணகுலசூரிய
**(Hemantha Warnakulasuriya)**


*புலிகள் இரண்டு காரணங்களுக்காக சிசிலியைத் தேர்ந்தெடுத்துள்ளனர். முதலாவது காரணம், அவர்களது பாதாள உலகத்துடனான தொடர்புகளுக்காகும். இரண்டாவது காரணம், புராதன காலத்து சேதமடைந்த கப்பல் சம்பந்தமான சட்டங்களின்படி, மூழ்கும் ஒரு கப்பலில் இருந்து மீட்கப்படும் ஒருவர் அங்கு ஒரு தற்காலிக வதிவிட அனுமதியைப் (Temporary Resident Visa) பெற்றுக்கொள்ள முடியும் என்பதினாலாகும். இத்தாலிக்கு பொருளாதார அகதிகளாக வந்த பெரும்பாலான தமிழர்களும், சிங்களவர்களும் பழைய படகுகளில் ஏற்றப்பட்டு, சிசிலிக்கு அருகே கொண்டு வரப்பட்டதும், கடலில் படகைச் சேதமாக்கிவிட்டு, படகு சேதமடைந்துவிட்டதாகக் கூறி நீந்திக் கரையேறுகிறார்கள் அல்லது கடலோரக் காவல் படையினால் மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அதன் பின்னர் அவர்கள் சேதமடைந்த படகுகள் சம்பந்தமான புராதனச் சட்டங்களின்படி நடாத்தப்படுகிறார்கள்.*

*அப்படி வந்தவர்களின் விண்ணப்பப் படிவங்களைத் தயார் செய்வதற்கு புலிகள் பெருந்தொகையான பணத்தை அறவிடுகின்றனர். அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு இத்தாலியிலுள்ள தொடர்புகளைப் பொறுத்து அவர்களில் பெரும்பாலானவர்கள் இத்தாலியின் வடக்கிலுள்ள றியோ எமிலியா (Regio Emilia) என்ற இடத்துக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இத்தாலிய மண்ணில் கால் வைத்த நேரத்திலிருந்து அவர்கள் பெருந்தொகையான பணத்தை புலிகளுக்குச் செலுத்துகின்றனர். அவர்களில் பெண்கள் செய்யும் வீட்டுப் பணியாளர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் ஆண்கள் செய்யும் தோட்ட வேலைகள், தொழிற்சாலை வேலைகள் போன்ற மிகத் தாழ்ந்த தரத்திலான வேலைகளிலிருந்து கிடைக்கும் ஊதியத்திலிருந்து இந்தப் பணத்தைச் செலுத்துமாறு அவர்கள் புலிகளால் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்த விடயத்தில் அவர்களுக்கு புலிகளிடமிருந்து எந்த தயவு தாட்சண்யமும் கிடையாது. அவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக புலிகள் இத்தாலியில் நடாத்தும் ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றும்படி நிர்ப்பந்திக்கப்படுவதுடன், இலங்கையில் தமது யுத்த முயற்சிகளுக்கு நிதியளிக்குமாறும் நிர்ப்பந்திப்படுகின்றனர். நான் எனது முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டவாறு, அவர்கள் இலங்கைத் தூதரகத்துடனும், சிங்களவர்களுடனும் தொடர்புகள் எதுவும் வைக்கக்கூடாது என்றும் எச்சரிக்கப்படுகின்றனர்.*

*எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகத்தினதும் நாட்காட்டியில் உள்ள முக்கியமான தினங்களில்*

*ஒன்று, அந்த நாட்டின் தேசிய தினமாகும். குறைந்த வளங்களையுடைய நாடுகள்கூட, பிரமாதமான தேசிய தின வைபவத்தை ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் ஏற்பாடு செய்வார்கள். இது அந்த நாட்டினதும், அவர்களுடைய இராஜதந்திரக் குழுவினதும் செல்வாக்கைக் காட்டும் ஒரு கருவியாகக் கணிக்கப்படுகிறது.*

*பெரும்பாலான இலங்கைத் தூதரகங்களைப் பொறுத்தவரையில், நிதி மற்றும் சில நிர்ப்பந்தங்கள் காரணமாக தேசிய தின வைபவங்கள் தூதராலய முன்றலிலேயே சிக்கனமான சுதந்திர தினமாகக் கொண்டாடப்படுகிறது. ரோமை* (Rome) *பொறுத்தவரை பெப்ருவரி 4ஆம் திகதி குளிர் மிகுந்ததொரு நாளாக இருப்பதால், தூதராலய முன்றலிலேயே வைபவம் நடைபெறுவதுடன், அதில் பெரும்பாலும் ரோமில் இலங்கையர்களே கலந்து கொள்வர்.*

*புலிகளும்கூட தேசிய தினத்தையிட்டு அக்கறை செலுத்துவதுண்டு. அவர்களது பிரதான கவனம் தேசிய தின வைபவத்தைக் குழப்புவதாகவே இருக்கும். ஒரு வருடம் அவர்கள் ஐரோப்பாவிலுள்ள பல இலங்கைத் தூதரகங்களைத் தாக்கியதுடன், நோர்வேயிலிருந்த தூதராலயத்தைச் சேதமும் ஆக்கினர். அவர்கள் இலங்கைத் தூதரகங்களுக்கு சில யார்கள் தூரத்தில் நின்று கொண்டு கறுப்புக் கொடிகளைக் காட்டி, ஒலிபெருக்கிகளில் சத்தமிட்டு, இலங்கையின் தேசியக் கொடியை எரித்து, புலிகளின் கொடியைப் பறக்கவிட்டு, இலங்கைத் தூதராலயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்து ஊடகங்களின் கவனத்தைத் தம் பக்கம் திருப்புவது அவர்களது வழமையானதொரு நடவடிக்கையாகும். நான் புலிகளின் திட்டங்களை உறுதியுடன் நிறுத்தி, தூதுவராலயத்துக்கு அருகில் எந்தவொரு இடத்திலும் எவ்விதமான ஆர்ப்பாட்டங்களும் நடைபெறாமல் தடுத்தேன்.*

*புலிகள் மேற்கத்தைய அரசாங்கங்களைக் கவருவதற்காகச் செய்யும் பிரச்சாரத்தின் கருப்பொருள் என்னவெனில், சிங்கள - பௌத்த இராணுவத்தின் கொடுங்கோலாட்சியிலிருந்து தமது மக்களை விடுதலை செய்வதற்குத்தான் தாம் முயற்சிப்பதாகக் காட்டுவதுதான். அவர்கள் கெட்டித்தனமாகக் காட்ட முயல்வது என்னவெனில், வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழர்களில் பெரும்பாலானவர்கள் கத்தோலிக்கர்கள் என்றும், அவர்களை இலங்கையின் சிங்கள பௌத்தர்கள் கொல்கிறார்கள் என்பதும்தான். இதன் மூலம் அவர்கள் காட்ட முயல்வது என்னவெனில், சிங்கள பௌத்த அரசாங்கம் ஓர் இனவாத யுத்தத்தில் மட்டுமல்ல, மதவாத யுத்தத்திலும் ஈடுபட்டிருக்கிறது என்பதையே. பல வெளிநாட்டவர்கள், விடயமறிந்த இராஜதந்திர அதிகாரிகள் உட்பட, புலிகளின் பிரச்சாரத்தை அதன் உண்மைத்தன்மை பற்றிய கேள்வி எதுவுமின்றி நம்புகின்றனர். அதுதான் புலிகள் மேற்குலகில் நிலைத்தருப்பதற்கான காரணம். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் போலல்லாது, புலிகளிடம் கணக்கு வழக்கில்லாத அளவு நிதி இருப்பதால், அவர்கள் தாராளமாக அதைப் பயன்படுத்தி இலஞ்சம், ஊழல் என்பனவற்றில் ஈடுபடுவதுடன், பயமுறுத்தல்களும் செய்வதுடன், ஊடகங்களில் உள்ளவர்களுக்கும் பணத்தை வீசியெறிகிறார்கள். அத்துடன் அப்படியானவர்களுக்கு விமானப் பயணச் சீட்டுகளை வாங்கிக் கொடுத்து இலங்கைக்குப் பயணம் செய்ய வைப்பதுடன், அந்த நாட்டைப் பற்றி எதிர்மறையான அறிக்கைகளையும் எழுத வைக்கிறார்கள்.*

*2006ஆம் ஆண்டு யூன் 15ஆம் திகதி கெப்பிட்டிக்கொலாவ* (kebittigollawa) *படுகொலை நிகழ்ந்தது. இந்த பயங்கர நிகழ்வின் புகைப்படங்களையும், வீடியோக் காட்சிகளையும் வெளிவிவகார அமைச்சு எனக்கு அனுப்பி வைத்தது. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளையின் தலை துண்டிக்கப்பட்ட வீடியோ காட்சியையும், அது சம்பந்தமான ஊடகத் தகவல்களையும் எடுத்துச் சென்றேன். அந்தப் படங்களைப் பார்த்த சட்டத்தை மிகவும் நிதானமாக அமுல்படுத்தும் அதிகாரி உட்பட பலரினதும் உணர்வலைகளை அது தூண்டியது.*

DIGOS *(இரகசிய பொலிஸ்) தலைமை அதிகாரி டாக்டர் அன்ரோனியோ போரோறெல்லி (*Dr.Antonio Borerelli*) மற்றும் இரகசிய பொலிஸ் பணிப்பாளர் டாக்டர் அன்ரோனியோ செபோடோன்* (Dr.Antonio Sbordone) *ஆகியோருடனான எனது முதல் சந்திப்பிலேயே எனது முயற்சி மிகவும் வெற்றிகரமாக அமைந்ததுடன், இத்தாலியில் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு பொலிசாரின் ஆதரவையும் பெற முடிந்தது. நான் எடுத்துச் சென்ற வீடியோ காட்சிகளும், நான் கொடுத்த விளக்கமும் கெப்பிட்டிக்கொல்லாவிலும் ஏனைய படுகொலைகளின் போதும், புலிகளின் கொடூரத்தனத்தைப் புரிய வைக்க உதவியது. ரோமர்களால் அடித்தளமிடப்பட்ட இத்தாலியர்களின் 3,000 ஆண்டுகள் பழமையான கலாச்சாரமும் நாகரீகமுமே, முழு மேற்கையும் அவர்களது நிலப்பிரபுத்துவ பின்தங்கிய நிலையிலிருந்தும், காட்டுமிராண்டித்தனமான சமூகத்திலிருந்தும் இன்றைய நாகரீக நிலைக்குக் கொண்டு வந்தது என்பதை நான் அறிவேன்.*

*இத்தாலிய சமூகத்தில் பெண்களுக்கு மிக முக்கியமான இடமுண்டு. அத்துடன் அவர்களது குடும்பத்தில் தாய் என்பவர் மீது அதிக மரியாதை செலுத்தப்படுதுடன், அவர் குடும்பத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்தும்*

*கணிக்கப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள பௌத்த பின்னணியிலிருந்து வரும் ஒருவர்கூட அப்படியானவர்தான். பெண்கள் மீது அவர்கள் செலுத்தும் மரியாதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவு இருப்பதுடன், அதேபோன்றே குழந்தைகளின் பாதுகாப்பிலும், அவர்களின் உரிமைகளிலும் செலுத்தும் அக்கறையும் இருக்கும்.*

*எனவே பயங்கரவாதத்தின் கொடூரச் செயலாக நிகழ்த்தப்பட்ட இந்தப் படுகொலையில் மரணித்த பெண்களினதும் குழந்தைகளினதும் உடல்களைப் பார்த்தபோது, DIGOS இன் மிகவும் சிரேஸ்ட பணிப்பாளர்கள் இளகியும் உருகியும் போனார்கள். எந்தவொரு விடுதலை இயக்கமும், எந்த வடிவத்திலேனும், பெண்களையும் குழந்தைகளையும் இந்த மாதிரி கொல்லக்கூடாது என அவர்கள் என்னிடம் கூறினார்கள்.*

*இத்தாலியில் மட்டுமின்றி ஐரோப்பா முழுமையிலும் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ரோமில் உள்ள தமது தலைமைக் காரியாலயத்தில் மூவர் கொண்ட விசேட குழுவொன்றை அமைக்கும்படி தமது அரசாங்கத்தைத் தாம் வேண்டுவதாக அவர்கள் இணங்கிக் கொண்டனர்.*

**(இந்தக் கட்டுரையை எழுதியுள்ள Hemantha Warnakulasuriya ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியும், இத்தாலிக்கான இலங்கைத் தூதுவருமாவார். இக்கட்டுரை 2012 நவம்பர் 12 இல் அவரால் எழுதப்பட்டு, dbsjayaraj.com என்னும் இணையத்தளத்தில் பிரசுரம் செய்யப்பட்டது. கட்டுரையாளருக்கும், அதைப் பிரசுரித்த இணையத்தளத்துக்கும் எமது நன்றி)**

**தமிழில்: சுலோசனா**

16ம் பக்கத்தொடர்ச்சி….

**அஸ்கார்:** அவர்கள் (மார்க்சிஸ்ட்டுகள் தலைமையில்) மே.வங்கம், கேரளா, திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களில் தொடர்ந்து ஆட்சியில் இருக்கிறார்கள். அவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதால் – குறிப்பாக நிலச் சீர்திருத்தத்தின் மூலம் நிலமற்ற ஏழை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளதால், மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது. உலக அனுபவத்திலிருந்து பாடம் படித்துக் கொண்டு காலத்துக்கேற்ற வகையில் கூடுதல் ஜனநாயகத் தன்மை வாய்ந்த சோசலிஸ முறையை முன்வைத்தால் எதிர்கால இந்தியாவில் அவர்களுக்கு செல்வாக்கு வளரும்.

**அமுது:** இலங்கையின் இனப் பிரச்சினை பற்றி உங்கள் கருத்து என்ன?

**அஸ்கார்:** இலங்கையில் யுத்தம் நின்று சமாதானம் வர வேண்டும் என்பதே எனதும் எல்லோரினதும் பிரார்த்தனை. பெரும்பான்மை சிங்கள மக்கள், சிறுபான்மை தமிழ், முஸ்லீம் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்க முன்வர வேண்டும். அதேவேளையில் தமிழ் மக்கள் உரிமைக்கான தமது போராட்டத்தில் விடுதலைப் புலிகளால் செய்யப்படும் பயங்கரவாதச் செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும். அதேபோல முஸ்லீம் மக்களும் தமக்கென இன ரீதியான கட்சிகளை அமைத்துச் செயல்படுவதைக் கைவிட வேண்டும். அனைத்து இனங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து செயல்படுவதின் மூலமே தமது உரிமைகளைப் பெற்று தனித்துவங்களைப் பேண முடியும். *

"நம் கருத்தில் ஓர் அகில ருஸ்ய அரசியல் செய்தித்தாளை நிறுவுவதே நம் செயலின் ஆரம்பப் புள்ளியாக, நாம் விரும்பும் அமைப்பைப் படைக்கும் முதல் நடைமுறை வேலையாக இருக்க வேண்டும். இந்தச் செய்தித்தாளே அமைப்பை ஒரே சீராக வளர்க்கவும், செழுமைப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அடிப்படை அம்சமாகப் பயன்படும். எல்லாவற்றுக்கும் மேலாக நமக்கு அவசியமானது ஒரு செய்தித்தாளே" – லெனின்

–எங்கிருந்து தொடங்குவது? என்ற கட்டுரையில்

## இலங்கையர்கள் மத்தியில் புழங்கும் போர்த்துக்கீய – டச்சு சொற்கள்!

"இலங்கைக் கரைநாடுகளை ஆண்ட போர்த்துக்கீயர் கறுவா வியாபாரத்தில் கவனஞ் செலுத்தியமையோடு இந்து சமுத்திரத்தில் தங்கள் பேரரசை நிறுவுவதற்கு இலங்கையை அரண் செய்தார்கள். அன்றி கத்தோலிக்க மதத்தையும் உரோமானிய கட்டடக் கலையையும் இங்கே பரப்பினார்கள். அவர்களுடைய மொழிச் சொற்கள் இலங்கையின் பழைய மொழிகளில் கலந்து நிலையாக வழங்குவனவாயின. அவை: கதிரை, மேசை, அலுமாரி, வாங்கு, சோபா, கடுதாசி, சாவி, திறாங்கு, அலவாங்கு, பிக்கான், லாந்தர், கோப்பை, பீலிஸ், போத்தல், பீப்பா, விசுக்கோத்து, பாண், கருவாடு, கோவா, கராம்பு, கொய்யா, அன்னாசி, பப்பா, மங்குஸ்தான், கசுக்கொட்டை, வத்தாலை, வத்தகை, வினாகிரி, சப்பாத்து, லேஞ்சி, கம்மிசை, மேஸ், துவாய், கழுசான், ரேந்தை, தீதாள், மேஸ்திரி, யன்னல், விறாந்தை, கிறாதி, வாணிஸ், வெந்தீஸ், வத்தை, நத்தார், தவறணை, கரத்தை, றோதை, பீரங்கி, பகா, என்பனவும் பிறவுமாம்.

போர்த்துக்கீயருக்குப் பின்வந்த ஒல்லாந்தர் 138 ஆண்டுகள் இலங்கைக் கரைநாடுகளை ஆண்டார்கள். அவர்கள் ஆட்சியின்போது கறுவா, பாக்கு, சங்கு ஆகியவற்றை அவர்கள் இலங்கையில் எடுத்தும், நெசவு வேலை, சாயமூட்டல் ஆகிய தொழில்களைப் பழக்கியும், மிளகு, கோப்பி, கரும்பு, புகையிலை ஆகிய பயிர்களை அபிவிருத்தி செய்தும், கோட்டைகள், வீதிகள், பாலங்கள், வாய்க்கால்கள், கச்சேரி, நீதிமன்றம், தேவாலயம் போன்ற கட்டடங்களைக் கட்டியும் பல அலுவல்களைச் செய்தார்கள். அவர்கள் மொழியில் உள்ள லாச்சி, தாச்சி, வக்கு, கக்கூசு, பிஸ்கால், நொத்தாரிசு, சக்கடத்தார், உலாந்தா, துட்டு, போஞ்சி, கலாவரை, ஏர், புறோ, வீறு முதலிய பல சொற்கள் இலங்கையில் வழங்குகின்றன"

**அறிஞரும் ஆசிரியருமான க.சி. குலரத்தினம் அவர்களால் எழுதப்பட்டு 1966ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட, 'நோத் முதல் கோபல்லவா வரை' என்ற நூலிலிருந்து**

*

# ஸ்டாலின் மீது மீண்டும் அவதூறு பொழிய ஆரம்பித்துள்ள பிற்போக்கு சக்திகள்!

உலகப் புரட்சிகர மக்களின் ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்தவரும், மாபெரும் சோவியத் புரட்சியின் தளகர்த்தர் மாமேதை லெனின் அவர்கள் 1924இல் மறைந்த பின்னர் 30 ஆண்டுகளாக சோவியத் புரட்சியைப் பாதுகாத்து, அதை உலகின் முன்னேறிய ஒரு நவீன சோசலிஸ நாடாகக் கட்டியெழுப்பியவருமான தோழர் ஸ்டாலின் அவர்கள் மறைந்து (1953) 60 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், உலகப் பிற்போக்கு சக்திகள் அவர் மீதான அவதூறைத் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அண்மையில் தோழர் ஸ்டாலின் மீதான அவதூறைப் புதுப்பித்த உலக முதலாளித்துவ ஊடகங்கள், புதிய கட்டுக்கதையொன்றை அவிழ்த்து விட்டுள்ளன. அதாவது பிரித்தானியாவின் அக்காலப் பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில் சோவியத் யூனியனுக்கு ஒருமுறை சென்றபோது, ஸ்டாலினும் சேர்ச்சிலும் இரவிரவாக மது அருந்திக் களித்தாகவும், ஸ்டாலின் ஒரு தீவிரமான மதுப்பிரியர் என்றும், அவர் எப்பொழுதும் மது அருந்திவிட்டுத்தான் தனது வேலைகளில் ஈடுபடுவார் எனவும் பிரிட்டனின் பிரபல ஊடகம் ஒன்று ஸ்டாலினுக்கு எதிராக அவதூறு வாந்தியை எடுத்தது. அந்த வாந்தியை உடனடியாகவே தமிழ் உட்பட உலகின் முழு முதலாளித்துவ ஊடகங்களும் விழுங்கிவிட்டுத் திருப்பி வாந்தி எடுத்தன.

உலகின் முழு முதலாளித்துவ நாடுகளும் புதிதாகப் பிறந்த சோசலிஸ சோவியத் அரசை அழிக்க எடுத்த முயற்சியை முறியடித்த, உலகைக் கபளீகரம் செய்யப் புறப்பட்ட ஜேர்மானிய சர்வாதிகாரி ஹிட்லர், இத்தாலியின் பாசிஸ்ட் முசோலினி, யப்பானிய ஏகாதிபத்தியம் என்பனவற்றை முறியடித்து உலக மக்களைப் பேரழிவிலிருந்து காப்பாற்றிய ஸ்டாலின் அவர்களின் தலைமைத்துவம் ஒரு மதுவெறித் தலைமைத்துவமாக இருந்திருந்தால் இந்த வரலாற்றுச் சாதனைகளை அவரால் நிறைவேற்றியிருக்க முடியுமா? அல்லது சோவியத் யூனியனை உலகின் முதல் மேல்நிலை வல்லரசுகளில் ஒன்றாக உருவாக்கியிருக்க முடியுமா? சோவியத் மக்களினதும், உலக மக்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்ந்திருக்க முடியுமா?

அவர் வாழ்ந்த காலத்தில் அவரை சோவியத் மக்கள் மட்டுமின்றி, உலகின் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட அனைத்து மக்களுமே மனதார நேசித்தனர். உதாரணமாக இந்தியாவின் தமிழக மக்கள் அவரை எப்படி நேசித்தனர் என்பதற்கு இதோ சில தகவல்கள்:

‘‘சென்னை கடற்கரையில் 1953 மார்ச்சு 7ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை தோழர் ஸ்டாலின் மறைவிற்கு இரங்கல் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்திற்கு தோழர் சர்க்கரைச் செட்டியார் தலைமை தாங்கினார். குத்தூசி குருசாமி, ம.பொ.சி, ஜீவா, பி.ராமமூர்த்தி, அண்ணா, திரு.கருணாநிதி, செங்கல்வராயன், ஆதித்தனார் மற்றும் பலர் ஸ்டாலின் சிறப்புப் பற்றிப் பேசினர்’’

குருவிக்கரம்பை வேலு எழுதிய ‘குத்தூசி குருசாமி’ என்ற நூலிலிருந்து.

‘‘சென்னை கடற்கரையில் - 2, 3 லட்சம் மக்களைக் கொண்ட ‘ரிக்கார்டு’ கூட்டம் ஒன்றுக்குப் போயிருந்தேன். மேடையின் ஒரு மூலைக் கம்பத்தில் இரண்டடி நீளமும் ஒன்றரை அடி அகலமும் உள்ள ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. அந்தப் படத்திலுள்ள உலகப் பெரியாரின் - ஸ்டாலின் - மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கவே அந்த மனித வெள்ளம் அங்குக் கூடியிருந்தது’’

- குத்தூசி குருசாமி ‘பேச்சாளர் கேட்பாளர் மறுமலர்ச்சி’ என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையில்.

### ‘‘இதோ ஸ்டாலின்!

தந்தை தோல் தொழிலாளி. தாய் சலவைத் தொழிலாளி. இவர்களின் பிள்ளை ஸ்டாலின்.

பர்னாட்சாவைப் போல், இன்னும் சில உலகப் பெரியார்களைப் போல், துவக்கத்தில் எழுத்தர் (Clerk).

எளிய நடையில எவருக்கும் புரியும்படியாகப் பேசுவார். ஒரு சங்கதியைத் திரும்பத் திரும்பக் கூறி மாற்றார் மனதைக் கரைப்பார். மற்ற ருஸ்யத் தலைவர்களிடம் இல்லாத ஒன்று, நகைச்சுவைப் பேச்சு இவரிடம் உண்டு. உணர்ச்சி மிகுந்த, கருத்தாழம் கொண்ட விவாதித்திடையே சுவையான சிறுகதை சொல்லிப் பிறர் நெஞ்சைத் தம்பால் இழுப்பார்.

கடினமான உழைப்பாளி. ஒரு நாளைக்கு 16 முதல் 18 மணி நேரம் தொடர்ந்து உழைப்பார். வேட்டையாடுதல், மீன் பிடித்தல் இவரது பொழுதுபோக்கு. நிறையப் படிப்பார். நீண்ட நேரம் படிப்பார். நல்ல நினைவாற்றலுள்ளவர்.

தம் குருவான லெனினைப் போலவே அரசியல் வட்டத்துக்கு வெளியே அவருக்கென தனி நண்பர்கள் இல்லை. ஸ்டாலினுக்கு

நம்பிக்கையுள்ள நண்பர் எவருமில்லை! தன்னந்தனியனாகவே இருக்கக்கூடியவர்.

இவரது முதல்மனைவிக்கு ஒரே மகன். நான்காண்டு மண வாழ்க்கைக்குப் பிறகு மணவிலக்குச் செய்துவிட்டார். இரண்டாம் மனைவிக்கு ஒரு மகன், ஒரு மகள். அவள் இறந்த பிறகு மூன்றாம் மனைவி.

ஸ்டாலின் ஆடம்பரத்தை விரும்பாதவர். மற்ற இராணுவத் தலைவர்களைப் போலவே உடை அணிவார். இரண்டே அறைகளைக் கொண்ட சிறு வீட்டில் வாழ்ந்து வந்தார்.

அவரிடம் தீய பழக்கங்களேயில்லை. உணவின் போதுதான் சிறிது மது அருந்துவார். சூதாட்டம், காமவெறி போன்ற தீமைகள் அவரை நெருங்கியதில்லை. மற்ற உயர்ந்த உத்தியோகத்தர்கள் உண்ணும் பொது உணவுச்சாலையின் உணவுதான் அவருக்கும். உணவில் உயர்தர வகை, ஆடம்பர வகை அறவே இல்லை. வயிறு புடைக்க உண்பார். உண்டபின் குழாய்ப்புகை (Pipe) பிடிப்பார். வீண் அரட்டை என்பதை வெறுப்பவர். ஸ்டாலின் கிண்டல் கலந்து பேசுவதில் நிபுணர்.

எத்தனை குருஸ்சேவ்கள் வந்தாலும் ஸ்டாலின் புகழ் - பெயர் அழியாது, மங்காது. ஹிட்லர் படையெடுப்பை ஒழித்துக்கட்டிய எ்.கு மனிதனல்லவா?''

குத்தூசி குருசாமி தனது 'குத்தூசி' பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையில்.

அமரர் குத்தூசி குருசாமி திராவிட கழகத் தலைவர் பெரியாரின் பிரதான உதவியாளராகவும், கழகத்தின் பொதுச்செயலாளராகவும், கழகப் பிரச்சார ஏடான 'விடுதலை' பத்திரிகையின் ஆசிரியராகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். அவர் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கட்டுரையில், ஸ்டாலின் மரணித்த போது எத்தனை இலட்சம் தமிழக மக்கள் அவருக்கு அஞ்சலி செலுத்த சென்னை மெரீனா கடற்கரையில் கூடியிருந்தனர் எனக் குறிப்பிடுவதிலிருந்தே, ஸ்டாலினின் உலகளாவிய செல்வாக்கைத் தெரிந்து கொள்ள முடியும்.

தோழர் ஸ்டாலின் அவர்களின் தாக்கத்தின் காரணமாகவே தி.மு.க தலைவர் மு.கருணாநிதி கூட தனது மகனுக்கு 'ஸ்டாலின்' என நாமம் சூட்டினார் என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். கருணாநிதி மட்டுமின்றி இந்தியா, இலங்கை உட்பட உலகம் முழுவதும் அந்தக் காலத்தில் தமக்குப் பிறந்த ஆண் பிள்ளைகளுக்கு மக்கள் லெனின், ஸ்டாலின் என்றும், பெண் பிள்ளைகளுக்கு ஜென்னி (மார்க்சின் மனைவி பெயர்) என்றும் பெயர் சூட்டுவது ஒரு பெருமையான நடவடிக்கையாக இருந்தது. அதுமட்டுமின்றி அன்றைய காலகட்டத்தில் பலர் தமது வீடுகளில் தமது இஸ்ட தெய்வங்களின் படங்களுக்கு இணையாக ஸ்டாலினின் படத்தையும் மாட்டியிருந்தனர் என்பது இன்றைய தலைமுறையினருக்கு சற்று ஆச்சரியமாகக்கூட இருக்கலாம்.

சோவியத் யூனியனில் துரோகி குருஸ்சேவ் ஆரம்பித்து வைத்த முதலாளித்துவ மீட்சி, கோபச்சேவ் என்ற இன்னொரு துரோகியால் பூரணப்படுத்தப்பட்டு, இன்றைய ஜனாதிபதியும் பிரதமருமான புடின் - மெதிடேவ் எதேச்சாதிகாரக் கும்பலால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

ஆனால் அவர்களின் எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக மீண்டும் ருஸ்ய மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவதுடன், மாபெரும் புரட்சியாளர் ஸ்டாலின் நினைவை மனதில் ஏந்தி பழைய சோசலிஸ சோவியத் அரசை மீண்டும் ஸ்தாபிப்பதற்காகப் போராடியும் வருகின்றனர். அதனால் அரண்டு போன புடின் - மெதிடேவ் கும்பல் ஸ்டாலின் மீது புதிய அவதுாறுகளைப் பரப்புவதற்காக, புதிய புதிய போலி ஆவணங்களை ஸ்டாலின் கால ஆவணங்கள் எனச் சோடித்து வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால் எத்தனை ஆயிரம் கரங்களைக் கொண்டும் ஸ்டாலின் என்ற முதலாளித்துவத்தைச் சுட்டெரிக்கும் சூரியனின் ஒளியை மறைக்கவோ, அவரது நாமத்தை மக்கள் மனங்களில் இருந்து அகற்றவோ முடியாது என்பதை வரலாறு மீண்டுமொருமுறை நிரூபித்தே தீரும்.

**– மணி**

## சீனாவில் தமிழ் சங்கம்

சீனாவின் பீஜிங் நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் 70 மேற்பட்ட தமிழர்கள் சேர்ந்து, பீஜிங் நகரில், தமிழ் சங்கம் ஒன்றினை துவக்கியுள்ளனர். சீன தலைநகர் பீஜிங்கில் ஏற்கனவே, மலையாளிகள் சங்கம் உள்ளது. தற்போது, பீஜிங் நகரில் தமிழர்கள் ஒன்று சேர்ந்து, "பீஜிங் தமிழ் சங்கமம்" என்ற பெயரில் சங்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

இச்சங்கத்தைப் பற்றி , "சர்வதேச சீன ரேடியோ" (China Radio International) சேவையில் பணியாற்றும் மரிய மைக்கேல் (Maria Michael) கூறியதாவது: பீஜிங் நகரில் பணி புரியும், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், இலங்கையை சேர்ந்தவர்கள், மலேசிய தமிழர்கள் ஒன்று சேர்ந்து, இந்த சங்கத்தை அமைத்துள்ளோம். இந்த சங்கத்தில், தமிழ் புத்தாண்டு கொண்டாடப்பட்டது. பீஜிங் நகரில் வசிக்கும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தமிழ் கலாசார நிகழ்ச்சிகளை நடத்தவும் திட்டமிட்டு உள்ளோம். இவ்வாறு, அவர் கூறினார்.

கிளிநொச்சி இன்று உலக ஊடகங்களில் அடிபடும் ஒரு பிரபலமான நகராக மாறி இருக்கின்றது. அதற்குக் காரணம் புலிகளுடனான இலங்கை அரச படைகளின் இறுதி யுத்தம் பெரும்பாலும் கிளிநொச்சிப் பிரதேசத்திலேயே நடைபெற்றமையாகும்.

1995 ஒக்ரோபரில் அரச படைகள் புலிகளை யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேற்றிய பின்னர், 2009 மே மாதம் வெள்ளாம் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்ற இறுதிப்போரில் தோற்கடிக்கப்படும் வரை, சுமார் 14 வருடங்களாக புலிகள் கிளிநொச்சியையே தமது தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வந்துள்ளனர்.



# போருக்குப் பிந்திய கிளிநொச்சி – ஒரு கண்ணோட்டம்

அதன் காரணமாவோ என்னவோ, போர் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் கிளிநொச்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் புதல்வரும், பாராளுமன்ற உறுப்பினருமான நமல் ராஜபக்ஸ கிளிநொச்சி அபிவிருத்தியில் நேரடி அக்கறை செலுத்தி வருகின்றார். மிக விரைவில் தமிழ்ப் பகுதிகளில் கிளிநொச்சி நகரம் முதல்தரமான நகரமாக மாறக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

போர் முடிவுற்ற பின்னர் கிளிநொச்சியின் நிலைமைகள் குறித்து சில தகவல்களைப் பார்ப்போம்.

கிளிநொச்சியின் தற்போதைய சனத்தொகை 135,605 ஆகும்.

போர் முடிவுற்ற பின்னர், கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்த (பெரும்பாலும் புலிகள் புதைத்தவை) 77,363,408 சதுர மீட்டர் பிரதேசத்தில், 64,057,713 சதுர மீட்டர் (83 வீதம்) பிரதேசத்தில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளது. மீதி இருக்கும் இடங்களில் 8 வீதமான பிரதேசங்களில் தற்பொழுது கண்ணி வெடி அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுதவிர காடுகளில் உள்ள 9 வீதமான பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றப்பட வேண்டியிருக்கிறது. இந்த கண்ணிவெடி அகற்றும் பணிகளில் இலங்கை இராணுவமும், ஐ.நா.கண்ணிவெடி அகற்றும் பிரிவும் ஈடுபட்டு வருகின்றன. யுத்தம் நடைபெற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில், இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணி வேகமாகவும், நல்ல முறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல சர்வதேச நிறுவனங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

போர் முடிவுற்ற பின்னர் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெரும்தொகையான பல்வகை ஆயுதங்களையும் படையினர் மீட்டுள்ளனர்.

**2012இல் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:**

31,505 வெடி பொருட்கள்
701 கை எறி குண்டுகள் (கிரனேட்டுகள்)
487 தனிப்பட்ட கண்ணி வெடிகள்
1170 மோட்டார் குண்டுகள்
172 ஆர்பிஜீ (RPG) குண்டுகள்
3 அடையாளம் காண முடியாத குண்டு வெடிக்க வைக்கும் கருவிகள்.

**2013 ஜனவரியில் மட்டும் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள்:**
6150 சிறு வெடிப் பொருட்கள்
17 கை எறி குண்டுகள்
20 ஏபி (AP) கண்ணி வெடிகள்
35 மோட்டார் குண்டுகள்
7 ஆர்பிஜீகள்
1 ஐஈடி (IED)

## இரத்தினம்

**அபிவிருத்தி முயற்சிகள்**

யுத்தம் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் தற்பொழுது பல்துறை சார்ந்த அபிவிருத்தி முயற்சிகளை ஆரம்பித்து செய்து வருகின்றது. குறிப்பாக நீர் விநியோகம், கல்வி அபிவிருத்தி, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் துறை, வர்த்தகம், சுகாதாரம், நீர்ப்பாசனத் திட்டங்கள், மீன்பிடித்துறை, மின் விநியோகம், தொலைத் தொடர்பு, வீடமைப்பு மற்றும் வீதி அபிவிருத்தி ஆகிய துறைகளில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வீதி அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் A-9, A-32, A-34, A-35, B-269, B-357 ஆகிய வீதிகள் உள்ளடங்கிய 176 கிலோ மீட்டர் நீளமான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 15,096 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தினதும், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் முயற்சியால் வன்னிப் பிரதேசத்தில் 42,480 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன. இராணுவமும் இதில் பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளது. உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின்படி பூநகரியில் 22,023 பேரும், கரைச்சியில் 65,723 பேரும், கண்டாவளையில் 23,366 பேரும், புதுக்குடியிருப்பில் 3,978 பேரும், மாந்தை மேற்கில் 1874 பேரும், துணுக்காயில் 9,742 பேரும், ஒட்டிசுட்டானில் 5,285 பேரும், மாந்தை கிழக்கில் 3,614 பேரும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியேறிய மக்களின் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக அரசாங்கம் 70,445.96 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களைப் பொறுத்த வரையில் பெரும்பாலான மக்களின் தொழில் விவசாயமும் மீன்பிடியும்தான். அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியளிப்புடன், இலங்கை மீன்பிடி அமைச்சின் உதவியுடன் பூநகரி மீனவர் கூட்டுறவுச் சங்கம் பூநகரியில் படகு கட்டும் தொழிற்சாலையொன்றை அமைத்துள்ளது. இதில் 8 பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு தயாரிக்கப்படும் கண்ணாடி இழைப் படகுகள் உள்ளூர் மீனவர்களுக்கு 5 இலட்சம் ரூபா விலைக்கு வழங்கப்படுகின்றன.

விவசாயிகளைப் பொறுத்தவரை நிலமில்லாத பிரச்சினையும், இருக்கும் நிலங்களுக்கு போதிய நீர் இல்லாத பிரச்சினையும் இங்கு பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. 1950களிலும், 1960களின் முற்பகுதியிலும் இங்கு அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கிய பின்னர் புதிதாக குடியேற்றத் திட்டங்கள் எதையும் உருவாக்கவில்லை. அந்தப் பழைய குடியேற்றவாசிகளின் பிள்ளைகளும், அவர்களது பிள்ளைகளும் வளர்ந்து குடும்பஸ்தர்களாகிவிட்டதால், அரசாங்கம் முன்னர் வழங்கிய 2 ஏக்கர் வீட்டுக் காணியும், 3 ஏக்கர் வயல் காணியும் பல தடவைகள் பிள்ளைகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டுவிட்டதால், இப்பொழுது அவர்கள் அரை ஏக்கர் 1 ஏக்கருடன் வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். இது அவர்கள் விவசாயம் செய்து வாழப் போதாது.

இதுதவிர இன்னொரு பிரச்சினையும் உருவாகியுள்ளது. போருக்கு முந்திய காலங்களில் 50 ஏக்கர் முதல் 300 ஏக்கர் வரை காணிகளை வைத்திருந்த பெரும் நிலச் சொந்தக்காரர்களின் காணிகளை பின்னர் புலிகள் கையகப்படுத்தி வைத்திருந்தனர். சில காணிகளை தமக்கு வேண்டியவர்களுக்கு பங்கிட்டளித்திருந்தனர். தற்போது போர் முடிவுற்றதும் அந்தக் காணிகளின் வாரிசுகள் (பெரும்பாலும் வெளிநாட்டில் வாழ்பவர்கள்) தமது காணி உறுதிகளுடன் வந்து அந்தக் காணிகளை மீட்டுத் தரும்படி கிராமசேவை அதிகாரிகளுக்கு நெருக்கடி கொடுக்கின்றனர். அந்தக் காணிகளை திரும்பவும் மீட்பதற்காக அரச அதிகாரிகளுக்கு இலட்சக்கணக்கில் இலஞ்சம் கொடுக்கவும் அவர்கள் தயாராக இருக்கின்றனர். அப்படியானவர்கள் இந்தக் காணிகளில் வந்து விவசாயம் செய்யப் போவதில்லை. அவர்கள் இப்பொழுது இந்தக் காணிகளில் பயிர் செய்பவர்களை வெளியேற்றிவிட்டு, அந்தக் காணிகளை வசதியுள்ளவர்களுக்கு அதிக விலைக்கு விற்பதற்கே முயல்கின்றனர். இந்த விடயத்தில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவது அவசியம். தேவையானால் விசேட காணிச் சுவீகரிப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து, வெளிநாடுகளில் சகல வசதிகளுடனும் வாழும் இந்தப் பெரும்காணிச் சொந்தக்காரர்களின் காணிகளைச் சுவீகரித்து, தற்பொழுது அந்தக் காணிகளில் உழுது பயிரிடும் ஏழை விவசாயிகளுக்கு அவற்றை வழஙக வேண்டும்.

விவசாயிகள் எதிர்நோக்கும் இன்னொரு முக்கியமான பிரச்சினை நீர்ப் பிரச்சினையாகும். இது ஆண்டாண்டு காலமாக கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து வருகிறது. முன்பு யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபர்களாகவும், உதவி அரசாங்க அதிபர்களாகவும் இருந்த சிறீகாந்தா, முருகேசம்பிள்ளை, சபாரத்தினம் போன்றவர்களுக்கு கிளிநொச்சியில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வயல்கள் இருந்ததால், அவர்கள் நீர் விநியோகத்தில் ஏழைக் குடியேற்ற விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் ஓரவஞ்சகமாக சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டனர்.

கிளிநொச்சியின் மிகப்பெரிய நீர்த் தேக்கமான இரணைமடு குளத்தைக் கட்டும் போதே, ஏழை விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் திட்டமிட்டுக் கட்டினர். குளத்தின் வலது வாய்க்காலால் தண்ணீர் பாயும் சாதாரண விவசாயிகளுக்குத் தண்ணீர் பாய்வதை நிறுத்திய பின்னரும், தாம் தொடர்ந்து தண்ணீர் பெறும் வகையில் தமது காணிகளுக்கு நீர் பாயும் வகையில் இடது வாய்க்காலை 6 அடிகள் பதித்து வைத்துக் கட்டிக் கொண்டனர். அத்துடன் சிறுபோக தண்ணீர் பங்கீட்டின்போது, வைத்திருக்கும் காணிகளில் மூன்றிலொரு பங்கு காணிக்குத் தண்ணீர் என்ற கபடத்தனமான திட்டமொன்றை வகுத்து, தாம் வைத்திருக்கும் 300 ஏக்கர் காணியில் 100 ஏக்கர் காணிக்கு தண்ணீரும், குடியேற்ற விவசாயி வைத்திருக்கும் 3 ஏக்கர் காணியில் 1 ஏக்கர் காணிக்கு மட்டும் நீரைப் பங்கிட்டுக் கொண்டனர்.

இந்த நிலை இன்றும் தொடர்கின்றது. விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு போதிய நீரற்ற இந்த நிலைமையில், அரசாங்கம் இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீர் வழங்கப் போவதாக வேறு கூறி வருகின்றது.

இன்று கிளிநொச்சி மக்களில் கணிசமான ஒரு தொகையினர் குடும்பத் தலைவர்கள் இல்லாத விதவைகளாக இருக்கின்றனர். கடந்தகால போர் விளைவித்த ஒரு கோர நிகழ்வு இது. கிளிநொச்சியின் 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மொத்தமாக 6,170 குடும்பங்கள் குடும்பத் தலைவர்கள் இல்லாத குடும்பங்களாக இருக்கின்றனர். இவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்தவும், புலிகளிடம் பறி கொடுத்ததுபோக

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...

# செங்கொடி சங்கத் தலைவர் தோழர் ஓ.ஏ.இராமையா மறைவுக்கு எமது அஞ்சலி!



தோழர் ஓ.ஏ.இராமையா

மலையக தோட்டத் தொழிலாளர்களின் மூத்த தலைவர்களில் ஒருவரும், இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தின் பொதுச் செயலாளருமான தோழர் ஓ.ஏ.இராமையா 2013 மே 18ஆம் திகதி அன்று தமது 76ஆவது வயதில் அட்டனில் காலமானார். நீண்டகால சுகவீனத்தின் பின்னர் இந்த மரணம் சம்பவித்தது.

சாதாரண ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனானப் பிறந்த தோழர் இராமையா, தமது இளமைக் காலத்திலேயே சமூகம் சார்ந்த விடயங்களிலும், முற்போக்குக் கருத்துக்களிலும் அக்கறை செலுத்தத் தொடங்கினார். அதன் காரணமாக இலங்கைத் தொழிலாளி வர்க்கத்துக்காக முன்னணியில் நின்று போராடி வந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கினார்.

அதன் மூலம் அந்தக் காலத்தில் மலையகத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் மிகவும் பலமாகச் செயற்பட்டு வந்த பிற்போக்கு கருத்துக்களைக் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்துக்கு சவால் விடும் வகையில், பலமிக்க ஒரு தொழிற்சங்கமாக இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தை உருவாக்குவதில் தோழர்கள் ரொசாரியோ பெர்னாண்டோ, சுந்தரம், முத்துலிங்கம் போன்றோருடன் இணைந்து பெரும் பங்காற்றினார்.

அத்துடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிற்கும் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார். ஒன்றுபட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் பின்னர் 1964இல் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட சித்தாந்த முரண்பாடு காரணமாக பிளவு ஏற்பட்டபோது, தோழர் இராமையா சீனசார்பு அணியுடன் இணைந்து கொண்டார். அக்கட்சியிலும் நா.சண்முகதாசன் தலைமைக்கு எதிரான போராட்டம் உருவாகி, அதிலிருந்து பிரிந்தவர்கள் 1972இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)யை உருவாக்கிய போது, அக்கட்சியுடன் தன்னை இணைத்து அதன் மத்திய குழுவிலும் பணியாற்றினார். பின்னர் அக்கட்சி 1980களில் செயலற்ற நிலைக்கு உள்ளான போது, மீண்டும் மாஸ்கோ சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் இணைந்து செயற்பட்டார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த தோழர் இராமையா, அரசியல், தத்துவார்த்த, கலாச்சார விடயங்களில் தமது ஆழமான புலமையை வெளிப்படுத்தி வந்துள்ளார். அத்துடன் மலையகத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பிரதான தொழிற்சங்க அமைப்புகளில் ஒன்றான தொழிற்சங்க கூட்டுக் குழுவின் செயலாளராகவும் திறமையாகச் செயற்பட்டுள்ளார். தொழில் நீதின்றங்களிலும் அவர் மிகவும் திறமையாக வாதங்களை முன்வைக்கும் ஒருவராகத் திகழ்ந்தார். அவரது மக்கள் பணி காரணமாக ஒருமுறை மத்திய மாகாணசபை உறுப்பினராகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்கள் பணியாற்றினார்.

தோழர் இராமையா அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் 'வானவில்' தனது ஆழ்ந்த அனுதாபங்களையும், தோழர் இராமையா அவர்களுக்கு இதயபூர்வமான தனது அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது.
*

---

11ம் பக்கத்தொடர்ச்சி….


மீதியாகவுள்ள தமது பிள்ளைகளைக் காப்பாற்றி வளர்க்கவும் வழி தெரியாது திண்டாடுகின்றனர். இவர்களுக்கு அரசாங்கமோ அல்லது உள்நாட்டு – வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களோ ஆக்கபூர்வமான வழிகளில் உதவி புரிவதாகவும் தெரியவில்லை.

இதுதவிர யுத்தத்தால் தமது தாய் தந்தையரை இழந்த குழந்தைகளைப் பராமரிக்கவென சில குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்ற போதும், அங்கு பொறுப்பாக உள்ள சில சமூக விரோதிகளால் அதிகார துஸ்பிரயோகம், நிதி மோசடி, சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பரவலாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இவ்வாறு தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு இருந்த போதிலும், கடுமையான உழைப்பாளிகளான இந்த மக்கள் தமது சொந்த முயற்சிகளால், தமது வீடுகளை திருத்தியும் புதிதாகக் கட்டியும் வாழுவதுடன், தமது தொழில் முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றனர். அவர்களைப் பொறுத்த வரையில் இன்றைய காலகட்டத்தில் அரச அதிகாரிகளினதும், அரசியல் கட்சிகளினதும் ஆதரவு நிச்சயமாகத் தேவை என்ற போதிலும், அவர்களது நலன்களுக்காக அரசியல் உள் நோக்கமோ அல்லது சுயநலமோ இன்றி அவர்களுக்காகச் செயல்படும் ஒரு வெகுஜன அமைப்புத்தான் இன்று அவர்களுக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றது.
*

இலங்கையில் 2009 மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகள் இறுதிப் போரில் அரச படைகளால் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 4 ஆண்டுகளாக அத்தினத்தை அரசாங்கம் பெரும் எடுப்பிலான வெற்றி தினமாக முப்படைகளின் இராணுவ அணிவகுப்புடன் கொண்டாடி வருகின்றது.

மறுபக்கத்தில் இதே தினத்தை இலங்கையிலுள்ள தமிழ் மக்களும், உலகெங்கும் உள்ள தமிழ் மக்களும் தமது உறவுகளைப் பறிகொடுத்த நாளாக – துக்க நாளாக நினைவு கூர்ந்து வருகின்றனர். இதில் அரசியல் உள் நோக்கத்துடன் செயற்படும் புலி ஆதரவாளர்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், தமிழகத்திலுள்ள தமிழின பிழைப்புவாதிகளும் ஒருபடி மேலேபோய், இத்தினத்தை இலங்கை அரசு செய்த 'தமிழின அழிப்பு நாளாக' கொண்டாடி வருகின்றனர்.




# மே 18 வெற்றி தினமா? துக்க தினமா?

இந்த இரண்டு எதிரும் புதிருமான போக்குகள், புலிகள் அழிக்கப்பட்டு, யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், இனங்களுக்கிடையில் ஒற்றுமையோ, புரிந்துணர்வோ, தேசிய ஒருமைப்பாடோ உருவாகவில்லை என்ற உண்மை நிலையை எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்குப் போராடுவதற்காக என ஆரம்பிக்கப்பட்ட புலிகள் இயக்கம், அந்த நோக்கத்திலிருந்து திசைமாறி கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் பெறுதல், பொதுச் சொத்துகளை அழித்தல், ஆயுதக் கடத்தல், போதைவஸ்துக் கடத்தல் போன்ற மனித குலத்துக்கு எதிரான செயல்பாடுகளில் ஈடுபட்டதால், அந்த இயக்கம் ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பாக உலக நாடுகளால் கணிக்கப்பட்டு, ஒடுக்கப்பட வேண்டிய இயக்கங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

அந்த இயக்கம் 30 ஆண்டுகளாக இலங்கையில் நடாத்தி வந்த உள்நாட்டுப்போர் காரணமாக இலங்கை பெரும் அழிவை நோக்கி வந்தது. எனவே என்ன விலை கொடுத்தென்றாலும் அந்த இயக்கத்தை அழிக்க வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் நீண்ட காலமாக இருந்து வந்தது. அந்த வகையில் மனித குலத்துக்கு எதிரான புலிகள் இயக்கத்தை இலங்கை அரசு அழித்தொழித்ததை, சிங்கள மக்கள் மட்டுமின்றி, தமிழ் மக்களும் வரவேற்றனர்.

ஆனால் பயங்கரவாதப் புலிகள் அமைப்பை அழித்தொழித்த அரசாங்கம், அதன் பின்னர் எடுத்து வரும் நடவடிக்கைகள், தமிழ் மக்களின் நம்பிக்கையைச் சிதறடித்துள்ளது. யுத்தம் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கு நியாயமானதொரு தீர்வு காணும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அவரது அரசாங்கமும்கூட அவ்வாறான ஒரு நம்பிக்கையை யுத்தம் முடிவுற்ற கையோடு வெளிப்படுத்தினர்.

ஆனால் அரசாங்கம் அந்தத் திசை வழியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. அதுமாத்திரமின்றி, அரசாங்கத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள சிங்கள பேரினவாத சக்திகளின் அழுத்தம் காரணமாக, அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்சத் தீர்வான 13ஆவது திருத்தத்தைக்கூட செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது தமிழ் மக்கள் அரசாங்கம் மீது கொண்டிருந்த நம்பிக்கையை முற்றுமுழுதாக சிதறடித்துள்ளதுடன், இதுவரை காலமும் அரசாங்கம் தமிழ் மக்கள் பிரச்சினையில் நியாயமாக ஏதாவது செய்யும் என எதிர்பார்த்திருந்த நடுநிலைமையான சக்திகளும் அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாடு எடுக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

இந்த நிலைமையில் அரசாங்கம் எதிரி நாடு ஒன்றுடன் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவது போல, புலிகளை அழித்த தினத்தை வருடாவருடம் பெரும் கொண்டாட்டங்களுடன் நினைவு கூருவது தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க ஒருபோதும் உதவாது. புலிகளை அழித்ததையிட்டு மகிழ்ச்சி அடைந்த தமிழ் மக்களை ஏமாற்றுவது போல, அவர்களது உரிமைகளை வழங்க அரசாங்கம் மறுத்து வருவதால், தமிழ் மக்கள் முன்னைய காலங்களைவிட மேலும் அரச எதிர்ப்பு நிலையை எடுப்பதுடன், தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையின் பக்கமும், புலிகளின் பக்கமும் செல்வதும் தவிர்க்க முடியாதபடி நிகழும்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்கள் அரசாங்கத்தின் வருடாந்த யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்குபற்ற மாட்டார்கள் என்பதுடன், அந்தத் தினத்தை ஒரு துக்க தினமாகவும் நினைவு கூர்வர் என்பது யதார்த்தபூர்வமானது. உண்மையில் புலிகளினதும் ஏனைய அரசியல் உள் நோக்கம் கொண்ட தமிழ் தேசியவாத சக்திகளினதும் உள்ளாந்த நோக்கங்களை விடுத்துப் பார்த்தால், மே 18 நாளைத் தமிழ் மக்கள் ஒரு துக்க தினமாக அனுஸ்டிப்பதில் மிகவும் நியாயமுள்ளது. ஏனெனில் இந்த நாளில் அரச படைகளினால் (ஓரளவு புலிகளினாலும்) ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். எனவே அவர்கள் தமது நேசத்துக்குரியவர்களை இழந்த சோகத்தை நினைவு கூர்வதில் உள்ள நியாயத்தை யாரும் மறுக்க முடியாது.

அதேவேளையில் எப்படியும் தொடர்ந்தும் ஒரே நாட்டுக்குள் ஒன்றாக வாழப்போகும் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒரு தேசிய ஒருமைப்பாட்டுக்கு வந்தே ஆக வேண்டும். அதை உருவாக்குவதானால், அரசாங்கம்தான் முன்கையெடுத்துச் செயல்பட வேண்டும். அதை உருவாக்குதானால், அரசாங்கம் பின்வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையாவது குறைந்த பட்சம் உடனடியாக எடுக்க வேண்டும்.

மே 18 தினத்தை பயங்கரவாதப் புலிகளை அழித்த தினமாக நினைவுகூர வேண்டுமேயொழிய, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத் தோற்கடித்த தினம் என்ற உணர்வை சிங்கள இனவாத சக்திகளிடம் ஊட்டும் வகையில் கொண்டாடக்கூடாது.

மே 18ஐ தமிழ் மக்கள் தங்களது உறவுகளை இழந்த துக்க தினமாக நினைவு கூர்வதற்கான தமிழ் மக்களின் நியாயமான உரிமைக்கு அரசாங்கம் இடையூறுகள் ஏற்படுத்தாது அனுமதிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கும் பொருட்டு, அவர்களது தேசிய இனப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான முறையில் (குறைந்த பட்சம் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலம்) தீர்வுகாண வேண்டும்.

அதேவேளையில், தமிழ் மக்களும் தமது பங்கிற்கு மே 18ஐ தமது உறவுகளை இழந்த துக்க தினமாக நினைவு கூர்கையில், புலிகளினதும், இதர பிரிவினைவாத சக்திகளினதும் தீய நோக்கங்களுக்குப் பலியாகாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

அதாவது புலிகளுக்கு எதிரான வெற்றியைக் கொண்டாடுவதில் உள்ள முக்கியத்துவத்தையும், அதேநேரத்தில் தமிழ் மக்கள் தமது உறவுகளை இழந்த துக்கத்தை அனுஸ்டிப்பதில் உள்ள நியாயத்தையும் முரணாகாத வகையில் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பதில்தான், இலங்கையின் எதிர்காலமே தங்கியுள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம்தான் முதல் நடவடிக்கையை ஆரம்பித்து வைக்க வேண்டும்.

அவ்வாறில்லாத பட்சத்தில் இலங்கையில் மீண்டும் பழைய வரலாறு திரும்பக்கூடிய வாய்ப்பு உண்டு. அப்படி ஏற்படுமானால், அந்த நிலைமையை அரசாங்கம் முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தில் கையாண்டது போல வெற்றிகரமாகக் கையாள முடியாது. ஏனெனில் அப்படியான ஒரு சூழ்நிலை ஏற்படும்போது, தமிழ் மக்கள் முழுமையாக அரசுக்கு எதிரான நிலையில் இருப்பதுடன், இலங்கைக்கு எதிராக தமது நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு திட்டமிட்ட அந்தரங்க நிகழ்ச்சி நிரலுடன் செயற்பட்டு வரும் சர்வதேச சக்திகள் அதற்கு ஆதரவாகவும் செயற்படக்கூடும். *

முன்பக்கத்தொடர்ச்சி…

இடதுசாரிக் கட்சிகள், தமிழ் – முஸ்லீம் கட்சிகள், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஆகியோர் இனப் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வு காணப்பட வேண்டும், அந்த வகையில் தற்பொழுது இருக்கும் 13ஆவது திருத்தத்தை மாற்றம் ஏதுமின்றி அப்படியே அமுல்படுத்த வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று தேனொழுகச் சொல்லிக்கொண்டு, மறுபக்கத்தில் ஒற்றையாட்சி அடிப்படையிலான புதிய அரசியல் திட்டமொன்றை வெளியிட்டுள்ளது. இந்த ஒற்றையாட்சி முறைதான் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வித்திட்டது என்பது அனைவராலும் ஏற்றுக்கொண்ட உண்மை என்ற போதிலும், ஐ.தேக மீண்டும் விசமத்தனமாக அதையே முன் வைத்துள்ளது.

1947இல் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியான சோல்பரி வகுத்த அரசியல் சட்டமும், 1972இல் இடதுசாரிகளையும் கொண்ட சிறீமாவோ பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் வகுத்த குடியரசு அரசியல் சட்டமும், 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசாங்கம் வகுத்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்ட அரசியல் சட்டமும், சாராம்சத்தில் ஒற்றையாட்சியையே அடிப்படயாகக் கொண்டவை.

இந்த ஒற்றையாட்சி இருக்கும் வரை தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ, நாட்டில் இன ஒற்றுமையை உருவாக்கவோ முடியாது என்றபடியால்தான், 1957இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, அதை மாற்றி அமைக்கும் வகையில் 'பண்டா – செல்வா உடன்படிக்கை'யை உருவாக்கினார். ஆனால் அதை நிறைவேற்ற விடாமல் ஐ.தே.க இனவாதப் பிக்குமாரைத் தூண்டிவிட்டு, நாட்டில் குழப்பங்களை உருவாக்கி அதைக் கிழித்தெறிய வைத்தது.

அதன் பின்னர் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம்

உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில், 1987இல் இந்தியா தலையிட்டு ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஆகியோருக்கிடையில் 'இந்திய - இலங்கை ஒப்பந்தம்' என்ற ஒன்றை உருவாக்கி 13ஆவது திருத்தத்தை இலங்கையின் அரசியல் சாசனத்தில் இணைத்தனர். அதன் அடிப்படையில் உருவான மாகாணசபைகள் முறைமை முறையான ஒரு அதிகாரப் பகிர்வு இல்லையெனினும், அதை நோக்கிய ஒரு முன்னகர்வாக இருந்தது. ஆனால் பின்னர் பதவிக்கு வந்த ஐ.தே.கவின் இனவாத ஜனாதிபதி ஆர்.பிரேமதாச புலிகளின் உதவியுடன் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்தார். அதன் மூலம் ஐ.தே.க இரண்டாவது தடவையாகவும் அதிகாரப் பகிர்வைத் தடுத்து நிறுத்தியது.

அதன் பின்னர் 2000 ஆண்டில் பண்டாரநாயக்கவின் புதல்வியும், அப்போதைய ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க சமஸ்டி அடிப்படையிலான 'பிராந்திய சபைகள்' என்ற முறையைப் பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார். அந்தச் சட்ட நகல்வரைவை ஐ.தே.க பாராளுமன்றத்திலேயே தீயிட்டுக் கொளுத்தி அதை நிறைவேற்றாமல் செய்தது. ஐ.தே.கவின் இந்த இனவெறிச் செயலுக்கு புலிகளால் வழி நடாத்தப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியும், சொல்லில் சோசலிசமும் செயலில் இனவாதமும் செயல்படுத்தும் ஜே.வி.பியும் துணை போயின. அதன் மூலம் மூன்றாவது தடவையாகவும் அதிகாரப் பகிர்வை ஐ.தே.க எதிர்த்து முறியடித்தது.

அதே நேரத்தில் இந்த ஒற்றையாட்சி முறையை மாற்றியமைப்பதில் அரசியல் ரீதியான போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில்தான், தமிழ் இளைஞர்கள் தமிழர்களுக்கு 'தனித் தமிழ்நாடு' ஒன்றை அமைப்பதற்கான ஆயுதப் போராட்டத்தில் குதித்திருந்தனர். 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்குப் பதிலாக, இராணுவ ரீதியாகத் தீர்க்க முற்பட்டதாலேயே, தமிழ் இளைஞர்கள் தனித் தமிழ்நாடு கோஷத்தை முன்வைக்கவும், அதற்காக ஆயுதம் ஏந்திப் போராடவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஐ.தே.க வரலாற்றிலிருந்து எந்தவொரு பாடங்களையும் கற்றுக் கொள்ளாமல், மீண்டும் ஒற்றையாட்சி முறையை முன் வைத்திருப்பதானது, அதன் சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என போலி நாடகம் ஆடும் அக்கட்சி, 13ஆவது திருத்தத்தை திருத்தியமைக்கும் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது, அதை எதிர்ப்பதற்குப் பதிலாக, தனது பாராளுமன்ற உறுப்பினர்களை மனச்சாட்சிப்படி வாக்களிக்க அனுமதிக்கப் போவதாகவும் தெரிய வருகிறது.

இது ஒருபுறமிருக்க சிவப்புக் கொடியையும், மாக்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் படங்களையும் தூக்கிக் கொண்டு தம்மை சோசலிசவாதிகள் என்று பீற்றித் திரியும் வெட்கம் கெட்ட இனவாதிகளான ஜே.வி.பி கட்சி 13ஆவது சட்டத்தில் திருத்தம் செய்வதைவிட, அதை முற்றுமுழுதாக இல்லாதொழிக்க வேண்டும் எனக்கூறி, தமது அசிங்கமான இனவாத முகத்தை மீண்டுமொருமுறை உலகின் முன் காட்டியுள்ளனர். ஆனால் கபடதாரிகளும்கூட தமிழ் மக்களின் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வாய் ஓயாமல் கூறி வருகின்றனர்.

இவர்களைத் தவிர, அண்மைக் காலமாக தமிழ் மக்களுக்காகப் பரிந்து பேசும் இன்னொருவராக அவதாரம் எடுத்திருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, யுத்த காலத்தில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்களை வெளிக் கொணர்ந்ததும், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியதுமான 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு'வின் அறிக்கையை நிராகரித்திருப்பதுடன், அந்த ஆணைக்குழுவை நியமித்ததே தவறு எனக் கண்டித்திருக்கிறார். அதிலிருந்து தெரிவது என்னவென்றால், முன்பொருமுறை கனடிய ஊடகம் ஒன்றுக்கு இராணுவத் தளபதியாக இருந்துகொண்டு வழங்கிய பேட்டியில் அவர் கூறிய, 'இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்துவிட்டுப் போகலாம், ஆனால் உரிமை கிரிமை என்று எதுவும் கோரக்கூடாது' என்ற அவரது இனவாத நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்பதைத்தான்.

இதில் வேதனையான விடயம் என்னவென்றால், இத்தகைய சிங்களப் பேரினவாதத் தலைமையுடன்தான், அன்றிலிருந்து இன்றுவரை எமது தமிழ் தலைமைகள் கூடிக்குலாவி வந்திருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, இந்த இனவாத பொன்சேகாவைத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. அதேபோல இதே இனவாத ஐ.தே.கவுடன் இணைந்துதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிங்கக் கொடியை ஏந்தி கூட்டாக மேதினம் கொண்டாடியது.

இன்று இலங்கையில் உள்ள நிலைமையில், தீவிர சிங்கள இனவாதக் கட்சிகள் மற்றும் அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் மட்டுமின்றி, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க மற்றும் ஜே.வி.பி, பொன்சேகா போன்றவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதை போட்டிபோட்டு எதிர்த்து வருகின்றனர்.

இந்த நிலைமை நீடிக்குமானால், அதாவது தமிழ் மக்களுக்கான எல்லாக் கதவுகளும் அடைக்கப்படுமானால், அவர்கள் மீண்டும் பிரிவினையை நோக்கித் தள்ளப்படுவதும், அதை அடைவதற்காக சகல விதமான வழி முறைகளையும் நாடுவதும் திரும்பவும் நிகழக்கூடிய வாய்ப்புத்தான் அதிகமாக உண்டு. அத்தகைய ஒரு சூழலை அரசாங்கம் இலகுவாக எதிர்கொள்ள முடியாத நிலைமையும் உருவாகும்.

தத்துவஞான ஆராய்ச்சிக்கு முதலில் அவசியமாக இருப்பது துணிவான, சுதந்திரமான அறிவே. – கார்ல் மார்க்ஸ்

# இஸ்லாமிய பேரறிஞர் அஸ்கார் அலி இஞ்சினியர் மும்பாயில் காலமானார்!



அஸ்கார் அலி இஞ்சினியர்

இந்தியாவின் புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞரான அஸ்கர் அலி இஞ்சினியர் (Asghar Ali Engineer) மே 14, 2013 அன்று மும்பை நகரில் தமது 73ஆவது வயதில் காலமாகிவிட்டார். அவரது மறைவு குறிப்பாக இஸ்லாமிய உலகின் அறிவுஜீவிகள் மத்தியிலும், பொதுவாக இந்திய சிந்தனைக் குழாமிலும் ஒரு பெரும் இடைவெளியை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

அலி அவர்கள் மிகவும் பழமைவாதப் பிடிப்பும், பிற்போக்கு நடைமுறைகளும் கொண்ட முஸ்லீம் சமூகத்தின் போராப் பிரிவில் பிறந்த ஒருவராகும். தமது இளமைக் காலத்தில் இஸ்லாமிய மார்க்கத் தத்துவங்களை ஆழ்ந்து கற்ற அவர், அதில் உள்ள காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் எனத் துணிகரமாகக் கருத்து வெளியிட்டார். அதன் காரணமாக அவர் 'துரோகி' என அச்சமூக மதத் தலைவர்களால் கண்டிக்கப்பட்டதுடன், மிகவும் மோசமாகத் தூசிக்கவும் பட்டார்.

ஆனால் அலி அவர்கள் தமது கருத்துக்களை விடப்பிடியாகப் பிரச்சாரம் செய்து வந்ததுடன், இந்தியாவில் மதக் கலவரங்களுக்கெதிராகவும், மதச்சார்பின்மையை நிலைநாட்டவும் அயராது பாடுபட்டு வந்தார். மதச்சார்பின்மை மற்றும் இஸ்லாமிய நெறி குறித்து ஏராளமான நூல்களையும் அலி எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் மதச்சார்பற்ற சமூகத்துக்கான கல்வி மையம் (Centre for Study of Society and Secularism) என்ற அமைப்பையும் அவர் நடாத்தி வந்தார். 'மதச்சார்பின்மைக்கான இந்திய இதழ்' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும், 'இஸ்லாமிய நோக்கு' என்ற இதழின் சிறப்பாசிரியராகவும் அவர் பணியாற்றினார். ஏராளமான இந்திய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார்.

அதன் காரணமாக அவரது சமூகத்தின் பிற்போக்குவாத மதத் தலைமை அவர் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடாத்தி வந்தது. கருத்து ரீதியாக மட்டுமின்றி, அவரை உடல் ரீதியாகவும் தாக்குதற்கு பிற்போக்கு மதவாத சக்திகள் பலமுறை முயன்று வந்துள்ளன. ஒருமுறை அவர் பம்பாய் விமான நிலையத்தில் வைத்து மிக மோசமாகத் தாக்கப்பட்டு, உயிர் ஊசலாடும் நிலைக்குக்கூடச் சென்றார்.

ஆனால் அவரது சளைக்காத மதச் சார்பற்ற பணியை மெச்சி, 1987இல் அமெரிக்காவின் புகழ்பெற்ற விருதான சர்வதேச மாணவர் பேரவை விருது அவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் 1990இல் டால்மியா விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

அமரர் அஸ்கார் அலி எஞ்சினியர் அவர்களை நினைவு கூர்ந்து, அவர் 2000ஆம் ஆண்டு பிற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்தபோது, லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிட்டு வந்த 'தினகரன்' நாளிதழின் சகோதர ஏடான 'அமுது' சஞ்சிகையின் 2000 நவம்பர் – டிசம்பர் இதழுக்கு வழங்கிய பேட்டியின் சில முக்கியமான பகுதிகளைக் கீழே தருகின்றோம்.

**அமுது:** இந்தியாவில் உங்கள் அமைப்பு என்ன பணிகளைச் செய்து வருகிறது?

**அஸ்கார்:** மதச் சார்பின்னையையும், இன நல்லிணக்கத்தையும், சமூக அமைதியையும் உருவாக்குவதற்கான உணர்வுகளை மக்களுக்கு ஊட்டி வருகின்றோம்.

**அமுது:** என்னென்ன வழிவகைகளைக் கையாள்கிறீர்கள்?

**அஸ்கார்:** ஆய்வுகள், கலந்துரையாடல்கள், பட்டறைகள், கருத்தரங்குகள், வெளியீடுகள், போஸ்டர்கள், ஆவணப்படுத்தல், அறிக்கை வெளியீடுகள் என்பனவற்றை மேற்கொள்கின்றோம். தவிரவும் இளைஞர் முகாம்கள், வீதி நாடகங்கள் என்பனவற்றையும் நடாத்துகின்றோம். எமது வேலைகளில் நேரடிக் கள ஆய்வுகள் முக்கியமானவை. நூலகங்களை நடாத்துவதுடன், கிரமமான சஞ்சிகைகளையும் வெளியிடுகின்றோம். முடியுமான சந்தர்ப்பங்களில் எம்மையொத்த சகோதர ஸ்தாபனங்களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றோம்.

**அமுது:** இந்திய இடதுசாரிகளின் இன்றைய – எதிர்கால நிலைமைகள் என்ன?

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...